**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 318 நாள்: 22.07.2026

**பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் முக்கிய தூய்மைப் பணியாளர்களுக்கான (Core Sanitation Workers) நலத்திட்ட முகாம் இன்று (22.07.2026) நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் முதன்மை தூய்மைப் பணியாளர்களுக்கான (Core Sanitation Workers) நலத்திட்ட முகாம் இன்று (22.07.2026) நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொது கழிப்பிடங்களில் பணிபுரியும் முக்கிய தூய்மைப் பணியாளர்களுக்கான (Core Sanitary Workers) நலத்திட்ட முகாமில் தாட்கோவின் கீழ் செயல்படும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வரியாத்தின் சார்பில் வழுங்கப்படும் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இயற்கை மரண உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கண்கண்ணாடி உதவி உள்ளிட்ட நலத்திட்ட விவரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை பெறுவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களுக்கு விரைவில் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும். மேலும் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், சுகதாரதுறையின் சார்பில் நோய்த்தடுப்பு பராமரிப்பு உடல் நலன் பாதுகாப்பு, குறித்த விழிப்புணர்வு, குறித்தும் விளக்கப்பட்டது. மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களின் பாதுகாப்பு அதற்கான திட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அரசின் சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களால் எடுத்துரைத்து அதனைப் பெறுவதற்கான வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் மாநகராட்சி, தாட்கோ, சுகதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**